# பிரதமர் சந்திரிகாவை முஸ்லிம்கள் ஏன் ஆதரிக்கவேண்டும்?



## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் - 1994

## முஸ்லிம்கள் தனித்து நின்று ஆதரிப்போமா? சேர்ந்து நின்று செயற்படுவோமா?

1994 நவம்பர் மாதம் 9ம் திகதி முழு உலகும் ஆவலோடு எதிர்பார்க்கும் இலங்கையின் மூன்றாம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தனி நபர்களாகவும் இத் தேர்தலில் செயற்படமுடியும்; அல்லது கூட்டாகச் சேர்ந்தும் நடவடிக்கைகளை பலப்படுத்தமுடியும். எவ்வாறு செயற்படுவதென தீர்மானிக்க வேண்டியது சிந்திக்கக் கூடியவர்களினதும் - பொறுப்புணர்ச்சியுடையவரினதும் கடமையாகும்.

தனித்து நின்று ஆதரவு வழங்குவதில் பெரிதாக எதையும் சமூகத்திற்கு எதிர்பார்த்து விட முடியாது. தனித்து நின்று வாக்களித்து எவரும் இதுவரை பெரிதாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. ஒரு சிலர் வேண்டுமெனில் தம்மிடமுள்ள இலட்சக்கணக்கான அல்லது கோடிக்கணக்கான பணத்தை ஒரு வேட்பாளரிடம் கொடுத்து அந்த வேட்பாளரின் தேர்தல் செலவுக்கு உதவலாம். வேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில் அந்நபர் பல மடங்கு அதிகமான பொருளீட்டுவதற்கு இந்த நடைமுறை உதவலாம் சிலவேளை அத்தகைய தனிப்பட்ட நன்மை கூட கிடைக்காமல் ஏமாற்றமும் படலாம் அவ்வாறு உதவுவது கூட விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலராலேயே முடியும். மாறாக, எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக ஒரு வேலைத் திட்டத்தை முன்வைத்து இயங்கும் போது தனிநபர் நன்மை என்ற கேள்விக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமின்றிப் போய்விடும் எல்லோரினதும் பொதுவான தன்மையைப் பற்றி சிந்திக்கக் கூடிய ஒரு நிலையும் ஏற்படும். வெற்றிபெற்ற நபர் ஒரு சமூகம் தன்னுடைய வெற்றியின் பின்னால் நின்று உழைத்துக் கொண்டிருந்தது என்பதை எப்போதும் மனதில் வைத்துக் கொண்டிருப்பார். அச்சமூகத்துக்கு உதவ வேண்டும் என்ற கடமைப்பாட்டுணர்வும் எப்போதும் அவர் சிந்தனையில் இரண்டறக் கலந்திருக்கும்.

## ஜனாதிபதி பிரேமதாஸ

இலங்கை அரசியலில் முதல் தடவையாக இரண்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீல லங்கா முஸ்லீம் காங்கிரஸின் பங்களிப்பு கணிசமாக இருந்ததை யாரும் மறந்து விட முடியாது. மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் முஸ்லிம் காங்கிரஸின் உதவியே தன் வெற்றியை நிர்ணயித்தது என்பதை எப்போதும் சொல்லி வந்தார். முஸ்லிம் காங்கிரஸைச் சேராத முஸ்லிம் ஆதரவாளர்களும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்தனர். இருப்பினும் கூட தனி நபர்களால் அளித்த ஆதரவு கணக்கில் எடுக்கப்படவும் இல்லை நினைவில் நிறுத்தப்படவுமில்லை கடலில் கலந்து உப்பாக எம்முடைய ஆதரவை துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ள வேண்டுமா? நம்முடைய ஆதரவு ஆடையில் பட்ட தூசாக அர்த்தமற்று போக வேண்டுமா?

## பொதுத் தேர்தல்

1994 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் முடிவுகளும் முஸ்லீம் சமூகத்துக்கு நல்ல படிப்பினையைத் தந்திருக்கின்றன. பொது ஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய முன்னணிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ முஸ்லீம்கள் தனித்து நின்று அளித்த ஆதரவு யார் கண்ணுக்கும் படவில்லை. இத்தகைய ஆதரவுகள் கணக்கில் எடுக்கப்பட்ட சம்பவம் நமது நீண்டகால வரலாற்றில் ஒருபோதும் நிகழவில்லை. மாறாக வடக்கு கிழக்கில் மாத்திரம் முஸ்லிம் வாக்காளர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டாக இயங்கி சாதித்தனை வரலாறு ஒரு போதும் மறக்கப் போவதில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பதற்குக் காரணமே முஸ்லிம் காங்கிரஸ்தான் என்ற சாதனையை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

## முஸ்லிம்களுக்கு கௌரவம்

முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்ட கீர்த்தி - வெற்றி கண்ணியம் என்பன அதனை விரோதித்த சில முஸ்லீங்களுக்கு கூட கௌரவத்தையும், பெருமையையும் தேசிய ரீதியாவும் சர்வதேச ரீதியாகவும் வழங்கியிருப்பதை நாம் மறந்துவிடமுடியாது. ஆகவே தான் முஸ்லீம்கள் மீண்டும் ஒரு தடவை ஆழமாகச் சிந்திக்க கடமைப்பட்டுள்ளார்கள் தொடர்ந்து கூட்டாகச் செயல்படுவதன் மூலம் முஸ்லீம் சமூகத்துக்கு இன்று நம் நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த கௌரவத்தை நாம் தொடர்ந்தும் வைத்திருக்க முடியும். அவ்வாறு செயற்பட மறுப்பது அந்த கண்ணியத்தை தூக்கிவீசுவதாகவும், நாமே நமது சப்பாத்துகளால் ஓங்கி உதைப்பதாகவும் முடியும்.

## ஐக்கியத்தின் அவசியம்

ஐக்கியப்பட்ட வாழ்க்கைமுறை ஒன்றையே அல்குர்ஆனும், அண்ணல் நபி அவர்களும் வலியுறுத்தியுள்ளனர். இருவர் தனித்துத் தொழுவதை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை இமாமாக்கி கூட்டாக நிறைவேற்றினால் அதன் நன்மை 27 மடங்காக அதிகரிக்கும். ஸகாத் கொடுப்பதில் கூட அதனை ஸதாபனமயப்படுத்தி அறவீடு செய்யுமாறும், பங்கீடு செய்யுமாறும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. நினைத்தவாறெல்லாம் நோன்பிருக்காது கடமையான நோன்பை குறிப்பிட்ட ஒரு மாதமான ரமழானில் நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளையும் ஐக்கியத்தை வலியுறுத்துவதாகவே அமைகிறது ஹஜ் கடமை கூட குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றுபட்டு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளோம். அத்துடன் நாள்தோறும் ஐந்து முறை கூட்டாகச் சந்திப்பது போல வாரமொரு தடவை ஜும்ஆவின் பெயராலும், வருடத்துக்கிருமுறை இரு பெருநாள்களின் பெயராலும் கூட்டுச் சமூகவாழ்வு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## ஆத்மீகமும் அரசியலும்

ஆத்மீக வாழ்க்கையில் மட்டுமன்றி வாழ்வின் சகல துறைகளிலும் கூட்டாக செயல்படுமாறு நாம் இஸ்லாத்தின் பெயரால் வற்புறுத்தப்பட்டிருக்கின்றோம். அரசியல் நமது அன்றாட வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகும் ஆகவே அரசியலிலும் நாம் கூட்டாக செயல்படுவதை தவிர வேறுவழியில்லை அல்லாஹ்வுக்கும் றசூலுக்கும், இஸ்லாமிய சமூக தலைமைத்துவத்துக்கும் கட்டுபட்டு அரசியல் வாழ்வில் கூட்டாக நடவடிக்கையில் இறங்க வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொரு முஸ்லீமின் கடமையுமாகும்.

இலங்கை ஒரு பௌத்த நாடு ஆகவே சிறுபான்மை முஸ்லீம்கள் குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் இயங்கமுடியாது அதற்கு மாறாக குர்அன், ஹதீஸுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பட்ட வழியிலேயே செயற்பட வேண்டுமென்ற முட்டாள் தனமான முடிவுக்கு நாம் வரமுடியாது. இந்த சூழ்நிலைகளில் நமக்கு தோற்றமளிக்கும் ஒரேயொரு வழி அல்குர்ஆனின் ஆணை, பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரி என்பவற்றை தன்னுடைய தாரக மந்திரமாக்கிக் கொண்ட ஒரு அரசியல் தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் உடன்பட்டுச் செல்வதாகும் யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இலங்கை முஸ்லீகளுக்கு உயிரோட்டமும், ஜீவகளையும், அரசியல் ஞனமும், தியாகமும் உள்ள ஓர் அரசியல் அமைப்பு ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் மட்டுமே.

எம்மைப் பொருத்தவரையில் அன்று முதல் அரசியல் தலைமைத்துவமொன்றை உலகளாவிய வழிகாட்டல் உருதுணையாக இருந்து வந்துள்ளது. ரசூல் (ஸல்) அவர்கள் மறைவுக்குப்பின் அடுத்த தலைமைத்துவம் தெரிவு செய்யப்பட்ட பிறகுதான் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் இது அரசியல் தலைமைத்துவமொன்றின் அத்தியவசியத்தை வலியுறுத்த நில்லதோர் உதாரணமாகும். இந்த நடைமுறையை மாற்றியமைக்க எம்மில் யாருக்கும் அதிகாரம் மில்லை சிறுபான்மை பெரும்பான்மை என்று வேறுபடுத்துவதும். இஸ்லாம் வேறு: அரசியல் வேறு என்று என்று பிரித்துப் பார்ப்பதும், அதிகாரப்பேராசை கொண்டவர்களாலும் இஸ்லாமிய ஞானம் குறைந்தவர்களாலும் ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயங்களே. பேரின வாதிகளின் பிடியிலிருந்தும் சந்தர்ப்பவாத தலைமைத்துவ பிரகடனங்களிலிருந்தும் விடுபட்டு நமக்கென்று உருவாகி வரும் புதிய தலைமைத்துவத்தின் கால்களை உறுதிப்படுத்த வேண்டியது நாம், எமது பிற்சந்ததியினருக்குச் செய்யும் ஒரு கடமையாகும். இந்தக் கடமையில் இருந்து நாம் பொறுப்புணர்ச்சியற்றிருப்பது பிற்காலத்தில் இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம்கள் அடிமைத்தளைக்குள் பிணைக்கப்படுவதற்கு வழி செய்தலாகவே அமையும்.

## தலைமைத்துவத்தின் அவசியம்

இந்த நாட்டின் புரையோடிப்போன புற்றுநோயாகிய இனப் பிரச்சினையை வடக்கு கிழக்கு முஸ்லீம்கள் பலாத்காரமாக இழுத்தடிக்கப்பட்டிருக்கிறார்கள் இவற்றில் வெளிநாட்டு உள்நாட்டு இன வெறியர்களினதும் இஸ்லாமிய எதிரிகளினதும் சதி வலைகளுக்குள் நாம் இழுத்துவிடப்பட்டிருக்கின்றோம் இக்கால கட்டத்தில் புத்திக்கூர்மையும், இரசியல் சாமர்த்தியமும் நிறைந்த ஒரு தலைமைத்துவம் இலங்கை முஸ்லீம்களுக்கு அவசியமாகும். ஏனெனில் இனப்பிரச்சினையின் சதி வலைப் பின்னங்கள் இலங்கை மக்கள் எல்லோரையும் நோக்கி வீசப்படுகின்றது. ஆகவே முஸ்லீம்கள் சலுகைகளை பெறக்கூடிய நிலைமைகளிலிருந்து முற்றாக விடுபட்டு உரிமைகள் பேசப்படுகின்ற அரங்குகளில் சரியாசனம் பெற்று அமரவேண்டியது அவசியமாகும். அத்தகைய மதிநுட்பமும் சாமர்த்தியமும், சமூதாய உணர்வும், ஆத்மீகப்பிணைப்பும், வாதாடுகின்ற வல்லமையும் கொண்ட ஒரு தலைமைத்துவத்தை ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கடந்த ஒன்றரை தசாப்பதத்தில் ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த தலைமைத்துவம் முஸ்லீகளின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளக்கூடிய, இனவாத வெள்ளத்தால் அள்ளுப்படாத, நாட்டின் அனைத்து மக்களையும் சமத்துவமாகப் பார்க்கின்ற, முற்போக்கு அபிலாஷைகளை தன்னுடைய அரசியல் தத்துவமாக வரித்துக் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவத்தோடு இணைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரிகாவை ஏன் ஆதரிக்க வேண்டும்

பிரதமர் சந்திரிக்கா பண்டாரநாயக குமாரணதுங்க அவர்கள் சமூகப்பொறுப்புவாய்ந்த ஓர் ஒப்பந்தத்தைச் செய்துள்ளதனால் இந்நாட்டு முஸ்லீம்களை ஒரு சமூகமாக அங்ககரித்து அவர்களின் பிரச்சினைகளை தனித்தனியாக இனங்கண்டு தீர்வுக்கான நடவடிக்கை எடுப்பதாக அவர் வாக்களித்துள்ளார். அவர் ஆட்சியமைத்த 2 மாதங்களுக்குள்ளேயே, கடந்த 17 வருடங்களாக வேரூன்யிருந்த கைலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், மனிதப்படுகொலை முதலியவற்றை ஓடவிரட்டி ஒரு புதிய நாட்டையும், புதியதோர் இலங்கைச் சமுதாயத்தையும் கட்டியெழுப்ப அவர் தன்னையே அர்பணித்துக் கொண்டார் அவரது அணுகுமுறைகளும், நடைமுறைகளும் நமக்கு உற்சாகத்தை அளிக்கின்றன. அவரின் உற்சாகமூட்டும் வாக்குறுதிகளைப் போன்று வேறு எந்த வேட்பாளரும் உறுதியளிக்க வில்லை என்பதாலும், திறந்த மனதுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாலும் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பளரான திருமதி சந்திரிக் பண்டாரநாயக குமாரணத்துங்க அவர்களை ஆதரிப்பதாக முடிவெடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவு பூர்வமான விளக்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் ஒரு மரநிழலில் ஒன்று கூட வேண்டியதன் அவசியத்தின் பேரில் இலங்கைத் திருநாட்டின் எதிர்கால சுபீட்சத்தின் பெயராலும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முஸ்லீம்கள் அனைவரும் ஐக்கியப்பட்டு பொது சன ஐக்கிய முன்னணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சின்னமான கதிரைக்கு நேரே வாக்களிக்க வேண்டு மென்று வினயமாக வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

அல்லாஹ் நமது எண்ணங்களில் தூய்மையையும் செயல்களில் உறுதியையும் வெற்றியையும் தந்து எப்போதும் நேரான வழியில் சீராக வழிநடாத்துவானாக.

ஆமீன்

**எம்.எச்.எம். அஷ்ரஃப்**
தலைவர்
ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ்,
தாறுஸ் ஸலாம்
கொழும்பு - 02
28 - 10 - 1994



பசிபிக் அச்சகம் (பி) லிமிரெட் கொழும்பு 13.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org